இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ் (ஐ.எஃப்.ஏ.)
அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற இந்தியப் பள்ளிகளிடமிருந்து
கலைக்கல்வித் திட்டத்தின்கீழ்
கலைகள் – ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டங்களுக்கான வேலைத்திட்ட
முன்வரைவுகளை வரவேற்கிறது

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: **December 15, 2026**

இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ் (ஐ.எஃப்.ஏ) இந்தியாவில் மெட்ரோபாலிட்டன் / பெருநகரப்பகுதிகள் சாராது ஏனைய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கமற்ற பள்ளிகளின் கலைக் கல்வி மூலமாகக் கற்றல் – கற்பித்தல் செயல்முறைகளை வலுப்படுத்தும் வகையில் கலைகள்-ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தினைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

(கன்னடத்தில் கற்றல், கற்பித்தல்) எனப்படும் கலி – கலிசு கலைக்கல்வித் திட்டம் வெவ்வேறு கலை வடிவங்களைப் பயன்படுத்தி, பள்ளிகளிலுள்ள பாடத்திட்டத்திற்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை வடிவமைத்து, கற்றல் செயல்பாட்டினை ஈடுபாடும் மகிழ்ச்சியுமுடைய தொன்றாக வளர்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த எண்ணத்தினைக் கருத்தில் கொண்டு, ஐ.எஃப்.ஏ. கலை-ஒருங்கிணைந்த கற்பித்தல் முறைகளுக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்குவதையும், மாணவர்களிடையே ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படும் அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற பள்ளிகளிடமிருந்து வேலைத்திட்ட முன்வரைவுகளை வரவேற்கிறது.

முந்தைய வருடங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள எங்களின் வேலைத்திட்டங்களை அறிந்துகொள்ள இங்கே சொடுக்கவும்.

திட்டங்களின் நோக்கம் :

இந்தத் திட்டங்கள் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களைச் செயல்படுத்துவதாக அமையலாம்.

- உள்ளூர் / வட்டார கலை வடிவங்களையும் பண்பாட்டுச் செயல்பாடுகளையும் வகுப்பறை கற்றல் கற்பித்தலுடன் இணைத்தல்
- எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்கான கற்றல் கற்பித்தல் முறைகளோடு கலைகளை ஒருங்கிணைத்தல்
- மாணவர்களின் வாழ்வனுபங்களைக் கற்றல் செயல்பாடுகளில் சேர்த்தல்

- உள்ளூர் / வட்டார கலைஞர்களையும், சமூகங்களிலிருந்து பெறப்படும் வளங்களையும் இணைத்துப் பணியாற்றுதல்

திட்டத்தின் கால அளவு:
குறைந்தது ஒருவருடம் முதல் அதிகப்படியாக 18 மாதங்கள் வரை

வரவுசெலவுத் திட்ட அளவு **(Budget):**
அதிகப்படியாக ரூபாய் 4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம்)

யார் யார் விண்ணப்பிக்கலாம்?

மெட்ரோபாலிட்டன் அல்லது பெருநகரங்கள் சாராத இடங்களிலுள்ள அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற பள்ளிகள். விண்ணப்பிக்கும் கல்வி நிறுவனம் உள்ளூர் மொழிகள் சார்ந்து இயங்கக்கூடியதாகவும் கற்றல் கற்பித்தலில் கலையும் பண்பாடும் மிக இன்றியமையாதவை என்ற நம்பிக்கையுடையதாகவும் இருக்க வேண்டும்.

தகுதி :

- சங்கப்பதிவுச் சட்டம் 1860 (The Society Registration Act 1860) / இந்திய அறக்கட்டளைச் சட்டம் 1882 (The Indian Trust Act 1882) என்பவற்றின் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமானதாக அல்லது அந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் பள்ளியாக இருக்க வேண்டும்.
- பள்ளி துவங்கி, குறைந்தது மூன்று ஆண்டுகளாவது செயல்பட்டு வந்திருக்க வேண்டும்.
- குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை (audited statement) வைத்திருக்க வேண்டும்.
- செயல்பாட்டிலுள்ள நிரந்தர கணக்கு எண்ணை (PAN) வைத்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்:

உங்களின் திட்ட முன்வரைவுகளை ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழியிலும் எழுதலாம். திட்ட முன்வரைவுகளை ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் எழுத ஐ.எஃப்.ஏ. ஊக்கப்படுத்துகின்றது.

உங்களின் இறுதித் திட்டமுன்வரைவுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

- வேலைத்திட்டத்திற்கான தலைப்பு
- பள்ளியின் செயல்நோக்கம் (mission) / கனவு (vision) / தொலைநோக்கு (overview)
- மாணவர்களின் சமூகப் பண்பாட்டுப் பின்புலம்

- விண்ணப்பிக்கும் திட்டத்தின் நோக்கங்கள்
- திட்ட முறையியலும் விரிவான பணித்திட்டமும்
- வேலைத்திட்டத்தில் பங்கேற்க இருக்கும் பிற (Resource persons)
- வேலைத்திட்டத்தை மதிப்பீடு செய்யும் முறை
- வேலைத்திட்ட த்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் (outcomes)
- விரிவான வரவு செலவுத்திட்டம் (detailed break-up of budget)

விண்ணப்பங்கள் பின்வரும் துணை ஆதாரங்களை பின்னிணைப்புகளாகக் கொண்டிருக்க வேண்டும்:

- அறக்கட்டளை குறிப்பாணையின் (Trust Deed) நகல் / சங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்த (Memorandum of Association) நகல்
- தற்போதைய அறங்காவலர்கள் / உறுப்பினர்களின் பட்டியலும் அவர்கள் குறித்த விவரங்களும்
- 12A / சங்கச் சட்டத்தின் (12A Society Act) கீழ் பதிவு நகல்
- குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை / கணக்காளரின் அறிக்கை (auditor's report)
- நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN) நகல்
- கலைக்கல்வி குறித்த தற்போதைய அல்லது கடந்தகால செயல்பாடுகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள்

உங்களின் இறுதித் திட்ட முன்வரைவு எல்லாவித ஆதாரங்கள், பின்னிணைப்புகளுடன் இணைய வழியாக, 25MBக்கு மிகாமல் ஒரே மின்னஞ்சலில் deepak@indiaifa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, **December 15, 2026** க்கு முன்னர் அனுப்ப வேண்டுகின்றோம்.
Subject line: IFA National Schools 2026-27 Proposal

முழுமையடையாத வேலைத்திட்ட முன்வரைவுகளும் விண்ணப்பிக்கும் தகுதிநிலை இல்லாத விண்ணப்பதாரர்களின் வேலைத்திட்ட முன்வரைவுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயைகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.

தேர்வு செய்யப்படும் முறை:

ஒரு புறத்தேர்வாளர் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகளை மதிப்பீடு செய்வர். விண்ணப்பதாரர்கள் இக்குழுவினரின் முன்னிலையில் தங்களின் திட்டம் குறித்த கருத்தோட்டங்களை அளிக்கை செய்ய வேண்டும். வேலைத்திட்டங்களைத் தேர்வுசெய்வதில் ஐ.எ.ப்.ஏ.வின் முடிவு இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எ.ப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.

முக்கிய நாள்கள்:

- வேலைத்திட்ட முன்வரைவைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள்: **December 15, 2026.**
- தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் **January 2027**இல் அறிவிக்கப்படும்.

குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எ.ப்.ஏ. உறுதி பூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.